தமிழகச் சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1967, ஜூன் 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. சி. பா. ஆதித்தனார்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள், விடைகள்.

* உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவைக் கூட்டத்தின் தொடக்கத்திலே ஒன்று சொல்லிவிட விரும்புகிறேன். வினாக்களுக்கும், விடைகளுக்கும் ஒதுக்கப்பட்ட நேரம் ஒரு மணி நேரம் ஆகும். அந்த நேரத்தின் முடிவில் வினாக்களுக்கு விடைகள் அளிக்கப்படாமல் இருந்தால் அவற்றை மறு நாளைக்குத் தள்ளிவைத்தால் அந்த அளவுக்கு அதிகமாகின்ற கேள்விகளுக்கும் மறுநாள் பதில் சொல்லவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சட்டசபை விதிகள் 35 (4), 22 என்ற இரண்டு விதிகளின்படி கேள்வி நேரம் முடிந்த உடனே எந்தெந்த வினாக்கள் கேட்கப்படாமல் இருக்கின்றனவோ, அவற்றையும் அவற்றிற்கான விடைகளையும் பேரவை நடவடிக்கை குறிப்பேட்டில் பதிவுசெய்ய வேண்டுமென்றிருக்கிறது. முன்பு இருந்த தலைவர்கள் எல்லாம் அந்த முறையை கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள். ஆகவே, கூடியமட்டும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் வினாக்களை ஒரு மணி நேரத்திற்குள் முடித்துக்கொள்வதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. விநாயகம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், இந்தச் சட்டசபை இப்பொழுது 16 ஆண்டுகளாக நடந்துவருகிறது. என்னுடைய அனுபவம் என்னவென்றால் வினாக்கள்—விடைகள் என்பதற்கு ஒரு மணி நேரம் என்ற விதி இருந்தபோதிலும்—தங்களைப்போல் பெருந்தகைத் தலைவர்கள் அந்த இடத்தை நிரப்பி இருக்கிறார்கள்—அவர்கள் எல்லாம் ஒரு மணி நேரம்தான் கேள்வி நேரம் என்று சட்டம் இருக்கிறது என்று தெரிந்து இருந்தாலும் பல ஆர்வம் உள்ள அங்கத்தினர்களுடைய கேள்விகளை, அவர்களுடைய தொகுதியைப் பற்றிய கேள்விகளையும் அனுமதித்திருக்கிறார்கள்.

Question-hour is a privilege enjoyed by the Members of the House. It is a most lively hour, when we keep the Ministers on their toes. It is almost a duel between the Members and the Cabinet Ministers.

ஆகையால் ஒரு மணிநேரம் என்பதை இரண்டு மணி நேரமாக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கேள்வி நேரம் ஒரு மணி நேரம் என்று ஒதுக்கப்பட்டிருந்தாலும், கேள்விகளின் தன்மையை ஆராய்ந்து, தகுதியை ஆராய்ந்து கூடுமானவரை நேரத்தை நிரவல் செய்துக்கொள்ளலாம். இரண்டு மூன்று கேள்விகள் பாக்கி இருந்தாலும் அதற்குப் பத்து நிமிஷம் வரை அதிகமாக எடுத்துக்கொள்ளலாம். ஆகவே கேள்விகளுக்கு ஒரு மணி நேரம் அல்லது 1¼ மணி நேரம் எடுத்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிலைமை எப்படி இருக்கிறதென்றால் ஏற்கெனவே 1,000 கேள்விகளுக்குமேல் முன்னறிவிக்கை கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கான விடைகளும் ஏராளவிற்குத் தயாராக இருக்கின்றன —ஒரு நாளைக்கு 12 அல்லது 14 வினாக்கள் என்று எடுத்துக்கொண்டு முடிப்பதாக இருந்தால் ஏராளவிற்கு நாம் மற்ற அலுவல்களை கவனிக்க

முடியும். உறுப்பினர் துணைக்கேள்விகளைக் கேட்பதற்காக கையை உயர்த்தும்போது நான் மறுக்கமுடியாமல் உள்ளத்தில் மிகவும் வேதனைப் படுவதை நீங்கள் அறிந்துகொள்ளவில்லை. எனவே, கூடியவரை உறுப்பினர்கள் துணைக்கேள்விகளை அதிகப்படுத்தாமலும், நீண்டதாகக் கேட்காமலும் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. முனு ஆதி : ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வேறு பாயின்ட் ஆப் ஆர்டராக இருந்தால் கேட்கலாம்.

திரு. முனு ஆதி : கேள்விகள் கேட்கின்ற நேரத்தில் திரு. விநயகம் போன்ற அங்கத்தினர்கள் நீண்டகாலம் எடுத்துக்கொள்கின்ற காரணத்தினாலே எங்களுக்கு வருகின்ற சந்தர்ப்பங்களையெல்லாம் அவர்களுக்கே போய்விடுகிற காரணத்தினாலும் எங்களுக்கு வாய்ப்புகள் கிடைப்பதில்லை. ஆகையால் நீண்ட கேள்விகளாகப் போடாமல் இருந்தால் எல்லோருக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எழுப்பியது நடைமுறைக் கேள்வி என்பதை நான் தெரிந்துகொண்டேன். ஆனால், கேள்வி அளை எப்பொழுது எழுகிறதோ அந்த நேரத்தில்தான் அதைப் பற்றிக் கேட்க வேண்டும்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே * * அவர்கள் நீண்ட கேள்வியாகக் கேட்டு மற்றவர்கள் நேரத்தையும் எடுத்துக் கொள்ளுகிறார்கள். சுருக்கமாகக் கேட்டால் எல்லோருக்கும் வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மதுரை விவசாயக் கல்லூரி

*110 வினு—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குறிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை விவசாயக் கல்லூரியில் 1966–67-ல் எத்தனை எக்கர்களில் நெல் விவசாயம் செய்யப்பட்டது ?

(இ) அதன் மூலம் எத்தனை மூட்டை நெல் மகசூலானது ?

(உ) அதற்கான செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) 269·17 எக்கர்கள்.

(இ) & (உ) 1967 மார்ச் வரை 169,903 கிலோ நெல் 155·51 ஏக்கரிலிருந்து அறுவடை செய்யப்பட்டது. 155·51 ஏக்கரில் சாகுபடி செய்ய செலவு ரூ. 40,562.

திரு. கரு. சீமைச்சாமி : விவசாயப் பண்ணைகளில் உழவு செய்யும்போது சாதாரண விவசாயிகள் செய்வதுபோல்தான் செய்கிறார்கள். நவீன விவசாயம் என்று சொல்லுகிறார்களே, அந்த முறைப்படி சிறு சிறு டிராக்டர் போன்ற நவீன கருவிகளை வைத்து அங்கே விவசாயம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விவசாயக் கல்லூரியிலே விவசாயம் செய்கின்ற நேரத்தில் போதுமான விஞ்ஞானக் கருவிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன. தொடக்கத்திலே அவைகளை எடுத்துக்கொண்ட நேரத்திலே சரியாகப் பயன்படுத்தப்படவில்லை என்று தெரிகிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல் விளைச்சல்பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அங்கே புதுமாதிரியான நெல் பயிரிடப்படுகின்றதா ? அப்படியென்றால் என்ன பயன் கிடைத்திருக்கிறது ?

---

* * பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

LS SECTION

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஆடுதுறை 27, கி. ஓ. 29. இரண்டும் பயிரிடப்பட்டு பயன் தருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : அங்கே விதைப்பண்ணையிலே 4,000, 5,000 ரூபாய் பெருமானமுள்ள பெரிய பெரிய மாடுகளை வைத்து உழுகிறார்கள். சேறு இருக்கிற காரணத்தினால் மாடுகள் காலைப் பிடுங்க முடியாமல் சேரில் கஷ்டப்படுகின்றன. ஆகவே, நடுத்தரமான மாடுகளை வைத்து உழுவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : முதலில் நான் அதை இன்னும் பார்க்கவில்லை. ஆகஸ்ட் மாதத்தில் அந்தக் கல்லூரியை நான் நேரடியாகப் பார்க்கயிருக்கிறேன். அந்த நேரத்திலே யோசனை செய்யலாம் என்று நினைக்கிறேன். கனம் அங்கத்தினருடைய கருத்து கவனிக்கப்படும்.

திரு. எஸ். முத்துலிங்கம் : விவசாயக் கல்லூரியில் மாணவர்கள் சேருவதாக இருந்தால் என்னென்ன தகுதி தேவைப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தக் கேள்வி விவசாயம் பற்றியது. தனிக்கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல் பயிரிடப்பட்டது என்று சொன்னார்கள். நெல் மட்டும் பயிரிடப்பட்டதா ? அல்லது மற்ற தான்யங்களும் பயிரிடப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நெல்லைப்பற்றிய கேள்விதான் இது.

கண்காணிப்பு இல்லங்கள்

* 111 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1966-ஆம் ஆண்டில் எத்தனை பெண்கள் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களுக்கு அனுப்பப்பட்டனர் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1,230 பெண்கள் சேர்க்கப்பட்டனர்.

திரு. கரு. சீமைச்சாமி : ஒழுக்க கண்காணிப்பு நிலையங்களிலிருந்து பெண்கள் வெளிவருகிறபோது திருமணம் ஆகாத பெண்களுக்கு திருமணம் செய்து வைத்து வாழ்க்கை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை ' எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கண்காப்ணிபு இல்லங்களிலிருந்து செல்லுவதற்கு முன்னரேகூட திருமணம் செய்துவைக்கவேண்டுமென்று அவர்கள் விரும்பினால் அரசாங்கமே அதற்கு ஏற்பாடு செய்து மணமகனுடைய வரலாற்றை அறிந்த பின்னாலே அனுமதி கொடுக்கிறது.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, கண்காணிப்பு இல்லங்களுக்கு மனுக்கள் ஏராளமாக வருகின்றன. இதை மேலும் விரிவுபடுத்தும் திட்டம் அரசினருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மனுக்கள் குறைந்து நல்லதொரு சமுதாயத்தை அமைக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

Thiru K. VINAYAKAM ; Having sent these fallen girls to the vigilance homes, what steps are taken by the Government to have them rectified and to make them behave properly and acquit themselves as citizens of India ?